Ragistered as a News Paper    மக்கங்கள் 04    விலை ரூபா: 5.00

நல்லூர் இன நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

# ஈழநாதம்

THE EELANAATHAM    Peoples Daily    மக்கள் தினசரி

நாதம்:- 03    திருவள்ளுவர் ஆண்டு 2023    வைகாசி 24    (06 - 06 - 1992)    சனிக்கிழமை    ஓசை: 1·9


தமிழ்நாட்டிலிருந்து


## சுயவிருப்பத்தில் வந்ததால் நிவாரணம் தேவையில்லையாம்

தமிழ் நாட்டில் இருந்து நாடு திரும்பிய அனைவரும் தமது சுய விருப்பத்தின் அடிப்படையிலேயே நாடு திரும்பியருப்பதால் அவர்களுக்கு நிவாரணமளிக்க வேண்டிய அவசியமில்லை என்று புனர் வாழ்வு அமைச்சின் உயர் அதிகாரிகள் கருத்து வெளியிட்டுள்ளனர். கடந்த மாதம் இறுதியில் கொழும்பில் நடைபெற்ற புனர்வாழ்வு மீளமைப்புக் குழுக் கூட்டத்தில் தமிழ்நாட்டிலிருந்து தாயகம் திரும்பிய மக்களின் எதிர்காலம் குறித்து பிரஸ்தாபிக்கப்பட்ட போதே இக்கருத்து தெரிவிக்கப்பட்டது எனினும் மேற்படி மக்களுக்கு உலர்

(4ஆம் பக்கம் பார்க்க)







யாழ். நகரில் நேற்று நடைபெற்ற பேரணியில் பங்கு பற்றிய சர்வமத குருமாரில் ஒரு பகுதியினரை முதலாவது படத்திலும், பொதுமக்களின் ஒரு பகுதியினரை இரண்டாவது படத்திலும் நல்லை ஆதீன குரு மகாசந்நிதானம் யாழ். அரச அதிபரிடம் மகஜரை கையளிப்பதை மூன்றாவது படத்திலும் காணலாம்.

# அரச அடக்குமுறைக்கு எதிராக

# யாழ். மக்கள் போர்க்கோலம்

## மதத் தலைவர்கள் தலைமையில் நேற்று நிகழ்ந்த மாபெரும் பேரணி

(யாழ்ப்பாணம்)

ஆலயங்கள் மீது சிறிலங்கா விமானப் படையினர் நடாத்திய கண்மூடித்தனமான குண்டு வீச்சுத்தாக்குதலைக் கண்டித்து யாழ். நகரில் நேற்று மாபெரும் பேரணி ஒன்று நடைபெற்றது. இப் பேரணியை சர்வசமய சமுதாய ஒன்றியம் ஏற்பாடு செய்திருந்தது. பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்ட இப்பேரணியின் இறுதியில்

## தொலைக்காட்சி நிறுவனம் பேரணியை படம் பிடித்தது

(யாழ்ப்பாணம்)

சைப்பிரஸ் தொலைக்காட்சி நிறுவனத்தைச் சேர்ந்த குழுவினர் நேற்றைய பேரணியினைப் படம் பிடித்ததுடன் சர்வமத பிரதி நிதிகளையும் சந்தித்து உரையாடினர்.

அத்துடன் சர்வமத பிரதி நிதிகளின் பேட்டிகளையும் ஒளிபபதிவு செய்தனர்.

இவர்கள் யாழ். குடாவின் பலபாகங்களையும் பார்வையிட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

## தமிழகத்திலிருந்து இலங்கைக்கு

## மோசடிகள் குறித்து தகவல் தரவும்

போலி இயக்க அத்தாட்சிகளைக் காண்பித்து பொது மக்களிடமும், வர்த்தகர்களிடமும் ஏமாற்று நடவடிக்கைகளில் ஈடுபட்ட பாலசுப்ரமணியம் விக்னேஸ்வரன் (வயது 19, ரீகல் நகர், யாழ்ப்பாணம்) என்பவர் தமிழீழ விடுதலைப் புலிகளால் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

இவர் பற்றிய விபரங்கள் தெரிந்தவர்கள் கோண்டாவில் செயலகம் அல்லது அண்மையில் உள்ள பிரதேச செயலகங்களுடன் நேரிலோ கடிதமூலமோ தொடர்பு கொள்ளும்படி விடுதலைப் புலிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.



## ஒந்தாச்சிமடத்தில் ஒரு தமிழ்மகன் கைது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டம் ஒந்தாச்சிமடம் என்னும் இடத்தில் வைத்து சிறிலங்கா விசேட அதிரடிப் படையினர் ஒரு தமிழ்மகனைக் கைது செய்துள்ளனர்.

கடந்த திங்களன்று ஒரு பிள்ளையின் தந்தையான சிவலிங்கம் பத்மநாதன் (வயது 24-கோவில் போரதீவு, மட்டக்களப்பு) என்பவரே இவ் இடத்தில் கைது செய்யப்பட்டவராவர்.

## பௌத்தத்தையாரிடமிருந்து பாதுகாக்க போராட்டம்?

### மாகாண முதலமைச்சர் கேள்வி

(கொழும்பு)

"இந்நாட்டின் பெரும்பான்மையினர் சிங்களவர்களே. நாட்டு சனத்தொகையில் நூற்றுக்கு எழுபதுசத வீதத்தினர் பௌத்தர்களேயாவர். இந்நிலையில், நாம் எதற்காக பௌத்தர்களையும், பௌத்த மதத்தையும் பாதுகாப்பதற்காக போராடவேண்டும்?"

இவ்வாறுசப்ரகமுவமாகாண முதலமைச்சர் ஜயட்ரண பிலபிட்டிய அகில இலங்கை பௌத்த சம்மேளனத்தின் ஏற்பாட்டில் இரத்தினபுரி நடைபெற்ற மாநாட்டில் கேள்வி எழுப்பினார்.

நாம் யாரிடமிருந்து பௌத்த மதத்தை பாதுகாக்க வேண்டும் எமது இனத்தின், நாட்டின் வரலாற்றைப் புரட்டிப்பார்த்தால் எமது பௌத்த மதத்தை பாதுகாத்து வந்தவர்கள் பௌத்த பிக்குமார்களேயாவர் உயிரையும் துச்சமென நினைத்து பௌத்த மதத்தை பாதுகாத்து வந்தவர்கள் பௌத்த பிக்குமார்களேயாவர் என்றும் அவர் தெரிவித்

# மதத் தலைவர்கள் தலைமையில் நேற்று நிகழ்ந்த மாபெரும் பேரணி

(யாழ்ப்பாணம்)

ஆலயங்கள் மீது சிறிலங்கா விமானப் படையினர் நடாத்திய கண்மூடித்தனமான குண்டு வீச்சுத்தாக்குதலைக் கண்டித்து யாழ். நகரில் நேற்று மாபெரும் பேரணி ஒன்று நடைபெற்றது. இப் பேரணியை சர்வசமய சமுதாய ஒன்றியம் ஏற்பாடு செய்திருந்தது. பல்லாயிரக் கணக்கான மக்கள் கலந்து கொண்ட இபபேரணியின் இறுதியில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரிடமும் யாழ். அரச அதிபரிடமும் மகஜர்கள் கையளிக்கப்பட்டன.

கொக்குவில் சந்தி, குருநகர் பகுதிகளிலிருந்து புறப்பட்ட மக்கள் வெள்ளம் நல்லூர் நல்லை ஆதினப் பகுதியிலிருந்து காலை 10 40 மணிக்கு ஆரம்பமாகிய பேரணியுடன் இணைந்து சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தைச் சென்றடைந்தனர். அங்கு மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து இவ் ஊர்வலம் யாழ் செயலகத்தை நோக்கி நகர்ந்தது.

பல்லாயிரக்கணக்கான பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், சனசமூக நிலையங்கள், கூட்டுறவாளர்கள், வர்த்தகர்கள், இந்துவாலிபர் சங்கங்கள், யாழ் இலக்கிய வட்டம், தமிழீழ வெகுஜன அமைப்புகளின் ஒன்றியம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் கலந்து கொண்ட பிரமாண்டமான ஊர்வலத்தைக் கட்டுப்படுத்தும் பணியிலும் வீதி ஒழுங்குகளைப் பேணும் நடவடிக்கைகளிலும் தமிழீழக் காவல் துறையினருடன் இணைந்து சென்ஜேன்ஸ் முதலுதவிப்படையினர், சாரணர் கள், திரி சாரணர்கள் ஆகியோர் ஈடுபட்டிருந்தனர்.

இதேவேளை வடக்கின் பல பகுதிகளிலும் சிறிலங்கா இராணுவ முப்படைகளும் தொடர்ச்சியாக மேற்கொண்டு வரும் தாக்குதல்களைக் கண்டித்து நேற்று யாழ் நகரில் நடாத்தப்பட்ட மாபெரும் கண்டன எழுச்சிப் பேரணிக்கு ஆதரவளிக்கும் நோக்குடன் யாழ். மாவட்டத்தின் அனைத்துப் பகுதிகளிலும் வர்த்தக நிலையங்களும் மூடப்பட்டிருந்தன.

சர்வமதங்களின் தலைவர்கள். தொண்டர்கள் மற்றும்

[4ஆம் பக்கம் பார்க்க)

# தொலைக்காட்சி நிறுவனம் பேரணியை படம் பிடித்தது

(யாழ்ப்பாணம்)

சைப்பிரஸ் தொலைக்காட்சி நிறுவனத்தைச் சேர்ந்த குழுவினர் நேற்றைய பேரணியினைப் படம் பிடித்ததுடன் சர்வமத பிரதிநிதிகளையும் சந்தித்து உரையாடினர்.

அத்துடன் சர்வமத பிரதிநிதிகளின் பேட்டிகளையும் ஒளிபபதிவு செய்தனர்.

இவர்கள் யாழ். குடாவின் பலபாகங்களையும் பார்வையிட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

## தமிழகத்திலிருந்து இலங்கைக்கு

# எரிபொருள் கடத்தல்; தடுக்க கடும் நடவடிக்கை

(தஞ்சை)

தமிழகத்திலிருந்து இலங்கைக்கு மண்ணெண்ணெய், டீசல், பெற்றோல் ஆகியவை கடத்தப்படுவதை முழு அளவில் கட்டுப்படுத்துவதற்காக தஞ்சை மாவட்டத்தின் கடற்கரைப்பகுதிகளில் ஏழு இடங்களில சோதனை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது

தஞ்சையில் அமைக்கப்பட்டுள்ள ஒவ்வொரு சோதனை நிலையங்களிலும் நவீன ஆயுதங்கள் ஏந்திய இருபது காவலர்கள் பணியில் ஈடுபடுத்தப் பட்டுள்ளனர் என்றும்,

மல்லிப்பட்டணத்தில் மத்திய ரிசேவ் பொலிஸ் படைப் பிரிவு ஒன்று பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதென்றும்,

(4ம் பக்கம் பார்க்க)

# பௌத்தத்தை யாரிடமிருந்து பாதுகாக்க போராட்டம்?

## மாகாண முதலமைச்சர் கேள்வி

(கொழும்பு)

''இந்நாட்டின் பெரும்பான்மையினர் சிங்களவர்களே. நாட்டு சனத்தொகையில் நூற்றுக்கு எழுபதுசத வீதத்தினர் பௌத்தர்களேயாவர். இந்நிலையில், நாம் எதற்காக பௌத்தர்களையும், பௌத்த மதத்தையும் பாதுகாப்பதற்காக போராடவேண்டும்?''

இவ்வாறு சப்ரகமுவமாகாண முதலமைச்சர் அபேரண பிலபிட்டிய அகில இலங்கை பௌத்த சம்மேளனத்தின் ஏற்பாட்டில் இரத்தினபுரி மாநகரசபை மண்டபத்தில் நடைபெற்ற மாநாட்டில் கேள்வி எழுப்பினார்.

நாம் யாரிடமிருந்து பௌத்த மதத்தை பாதுகாக்க வேண்டும் எமது இனத்தின், நாட்டின் வரலாற்றைப் புரட்டிப்பார்த்தால் எமது பௌத்த மதத்தை பாதுகாத்து வந்தவர்கள் பௌத்த பிக்குமார்களேயாவர் உயிரையும் துச்சமென நினைத்து பௌத்த மதத்தை பாதுகாத்து வந்தவர்கள் பௌத்த பிக்குமார்களேயாவர் என்றும் அவர் தெரிவித்தார்.

# கொழும்பில் பெருமழை பல பகுதிகள் வெள்ளத்தில்

(கொழும்பில்)

கொழும்பில் நேற்று முன்தினம் இரவு காற்றுடன் கூடிய பெருமழை பெய்தது இதனால் அங்கு பெருவெள்ளம் ஏற்பட்டுள்ளது. சுமார் 30.000 மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு அகற்றப்பட்டார்கள் மின்சாரம் முற்றாகத் துண்டிக்கப்பட்டது.

பருவ மழை பெய்யும் ஐந்து

(4ம் பக்கம் பார்க்க)

# வழிபாட்டு ஸ்தலங்களுக்கு செஞ்சிலுவை பாதுகாப்பு

## சர்வமதக் குழு கோரிக்கை

''சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக்குழு வடகிழக்கில் உள்ள வழிபாட்டிடங்களைப் பாதுகாப்புப் பிரதேசங்களாகப் பிரகடனம் செய்தல் வேண்டும்.

அரசாங்க அதிபர் நம்பிக்கை ரீதியிலும், மூலவள ரீதியிலும் ஏற்படுத்தப்பட்டுள்ள சேத விபரங்களை ஜனாதிபதியோடு தொடர்பு கொண்டு அவருக்கு அறிவித்தல்வேண்டும் இக்கொடிய செயலை உடனடியாக நிறுத்த வேண்டும்''.

இவ்வாறு சர்வசமய சமூக நிறுவனங்களின் ஒன்றியம் நேற்று யாழ். அரசாங்க அதிபர் திரு. மாணிக்கவாசகர் சர்வதேச செஞ்சிலுவைச்சங்க யாழ். கிளைபிரதிநிதி வெறோனிக்கா ஆகியோரிடம் கையளித்த மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது

இவர்கள் மூலம் சிறிலங்கா ஜனாதிபதி திரு ஆர். பிரேமதாசாவிற்கு அனுப்பி வைத்த மகஜரில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:

வடக்கின் சமயம், பண்பாடு, சமூகம், பொருளாதாரம் ஆகிய வாழ்நெறிகளோடு இணைந்த மக்களைப் பிரதிநிதித்துவப் படுத்தும் ''சர்வ சமய சமூக நிறுவனங்களின் ஒன்றியம்'' என்ற பெயரில் உருவாகியுள்ள அமைப்பில் அங்கம் வகிக்கும் நாம். யாழ்ப்பாணத்தின் முதன்மையான சமயவழிபாட்டிடங்களில் ஒன்றான தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்காதேவி ஆலயம் வன்தாக்குதலுக்குஉட்படுத்தப்பட்டமை வடக்கிலும், கிழக்கிலும் முக்கியத்துவம்வாய்ந்த வழிபாட்டிடங்களை அழித்துத்துடைத்து விடுவதற்கான ஓர் அடையாள நடவடிக்கையின் வெளிப்பாடே என்பதை உணர்ந்து இச் செயலுக்கு எதிராக ஒருமுகமான எமது கண்டனக் குரலை எழுப்புகின்றோம்.

உதவி வேறு கிட்டாது தஞ்சம் நாடி வந்த அகதிகளைத் தாக்கியும் தேசிய ரீதியிலும் சர்வதேச ரீதியிலும் தனது சமூகநலப்பணிகளாலே பெயர் பெற்றிருந்த ஆலயத்தின் சேவைகளுக்குத் தடை ஏற்படுத்தியும் விட்ட வகையிலே திட்டமிட்டு, சினமூட்டப்படாத நிலையிலும் தாக்குதலை மேற்கொண்ட கொடுஞ்செயலாக இது அமைந்தது பற்றி ஆலய நிர்வாகிகளின் அறிக்கை தெளிவுபடுத்தியுள்ளது.

தாக்குதலிலிருந்து தவிர்த்துக்கொள்ள மக்களை ஆலயங்களிலே சென்று குழுமும்படி மிக அண்மைக் காலத்திலேயே அறிவித்த பின்னரும். மேற்கொண்ட இந்த அடாழியமானது மிகமோசமான, மனி

(4 ஆம் பக்கம் பார்க்க)

# தம்பலகாமம் அகதி முகாமில் நிவாரணம் நிறுத்தம்

(திருக்கோணமலை)

திருக்கோணமலை மாவட்டம் தம்பலகாமம் அகதிகள் முகாமில் தங்கியுள்ள தமிழ் அகதிகளின் நிவாரணப் பொருள்கள் நிறுத்தப்பட்டுள்ளன. அதனால் அங்கு தங்கியுள்ள தமிழ் மக்கள் பட்டினிச்சாவை எதிர்நோக்குகின்றனர்.

அம்முகாம்களில நிவாரணப் பொருள்கள் இனிமேல் வழங்கப்படமாட்டாது என இராணுவத்தினர் தெரிவித்து விட்டனர்.

தம்பலகாமம் அகதி முகாமில் சுமார் 500 தமிழ்க் குடும்பங்கள் தங்கியிருக்கின்றன. தம்பலகாமம் பகுதியில் வசித்துவந்த குடும்பங்கள் இராணுவத்தாலும் முஸ்லிம்களாலும் அங்கிருந்து விரட்டியடிக்கப்பட்டுள்ளனர். அங்கிருந்து வெளியேறிய தமிழ் மக்களின் ஒரு பகுதியினரே அகதிமுகாமில் தங்கியுள்ளனர். இந்த அகதிகளையும் திட்டமிட்ட முறையில் முகாமிலிருந்து விரட்டியடிக்கவே சிறிலங்கா அரசாங்கம் இந்த நிவாரணத் தடையை கொண்டுவநதுள்ளது.

# ஆதரவாளர் வீரச்சாவு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டம் அரசடித்தீவு என்னும் இடத்தில் 03-06-1992 அன்று காலை 11.30 மணியளவில் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர் ஒருவர் இராணுவத்தினர் பதுங்கியிருந்து தாக்கியதில் வீரச்சாவு அடைந்தார்.

வீரச்சாவடைந்த கதிர்காமப்போடி கனகரத்தினம் (வயது 25 அரசடித்தீவு கொக்கட்டிச்சோலை) என்பவருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றனர்.

# எறிகணை வீச்சு

[யாழ்ப்பாணம்]

பூநகரி கௌதாரி முனையில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா ராணுவத்தினர் நேற்றுமாலை 6.45 மணியளவில் அரியாலை கிழக்குகடற்கரைப்பகுதியை நோக்கி எறிகணைத் தாக்குதல் மேற்கொண்டனர். எட்டுக்கு மேற்பட்ட எறிகணைகள் வீசப்பட்டன.

**வனமின்றிப் போனால் நம் இனமின்றிப் போகும்**

## மக்கட் பெயர் அகரவரிசை நூல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

மக்கட் பெயர் அகரவரிசை நூல் வெளியீட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற உள்ளது.

இவ்விழாவிற்கு பேராசிரியர் அ. சண்முகதாஸ் தலைமை வகிப்பார். பேராசிரியர் இ. பாலசுந்தரம் வெளியீட்டுரையையும் க, சொக்கலிங்கம், வீ, பரந்தாமன் விடுதலைப் புலிகள் நிதிப்பொறுப்பாளர் தமிழேந்தி ஆகியோர் கருத்துரையையும் நிகழ்த்துவர்.

தமிழ் ஆய்வலர்கள் அனைவரையும் இவ்விழாவில் கலந்து கொள்ளும்படி விடுதலைப் புலிகளின் தமிழ் வளர்ச்சிக் கழகத்தினர் அழைப்பு விடுத்துள்ளனர்.

## வரி விளம்பரம்

### காணவில்லை

4.06 92 அன்று கந்தையா நடராசா[புலேந்திரன் வீதி, பலாலிறோட். கோண்டாவில் கிழக்கு]என்பவருடைய பொமரேனியனை [வெள்ளை ஆண் நாய் ]காணவில்லை தயவு செய்து தகவல் தெரிந்தவர்கள் மேற்குறிப்பிட்ட முகவரியில் தொடர்பு கொள்ளவும் சன்மானம் வழங்கப்படும்.

[2641]

### புலமைப் பரிசில்

அரசாங்கத்தால் 26-04-92 [ஞாயிறு] நடத்தப்பட்ட பரீட்சை வினாத்தாள்கள் விடைகளுடன் விற்பனையாகின்றனபாடசாலைகளுக்கும், தனியார் கல்வி நிறுவனங்களுக்கும் விசேட கழிவுண்டு. பரீட்சைப் பகுதி Bond கல்வி நிறுவனம். யாழ்பாணம். [சி-4515]

புலமைப் பரிசில் பரீட்சை

ஆண்டு 5 புலமை பரிசில் மாணவர்களுக்கான விசேட வினாத்தாள்கள் பெற்றுக் கொள்ளலாம். விடையளித்துத் தந்தால் இலவசமாகத் திருத்திக் கொடுக்கப்படும். Bond Institutes 58A ஸ்ரான்லி வீதி.யாழ்ப்பாணம்.[சி/4576)

*FOR EXTERNAL DEGREE STUDENTS: "HANDBOOK FOR ENGLISH AS A SECOND LANGUAGE" Explains objectives behind Level I course Illustrates type of proficiency required Provides guidance for exercises.*

*Price ; Rs 25/- Available at External Degree Unit University of Jaffna.*


(சி/4510] Registrar

## தங்கம் கொண்டுவருவோர் பற்றுச்சீட்டு காட்டவேண்டும்

வவுனியா தாண்டிக்குளம் இராணுவ சோதனை முகாம் ஊடாக தங்கக் கட்டிகளை எடுத்துச் செல்வோர் தங்கக் கட்டிகளை வாங்கியதற்கான மத்தியவங்கி, அல்லது தீர்வை பற்ற கடை வழங்கிய ரசீதை தம்முடன் வைத்திருக்க வேண்டும் என சிறிலங்கா பாதுகாப்புத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு வைத்திருக்காவிடில் கடத்தல் சட்டத்தின் கீழ் அவர்கள் கைது செய்யப்படுவார்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## 45-ம் நாள் நினைவஞ்சலி



மலர்வு 20 . 8 . 1966


உதிர்வு 23 . 4 . 1992

### இராசையா தர்மேந்திரன்(காந்தி)

நாள்கள் நாற்பத்தைந்து சென்றாலும்
நாம் மறவோம் உன் திருமுகத்தை
கொம்படி மண்ணில் துடிதுடித்து வீழ்ந்திட்டகாந்தியே
நீ விண்ணில் பொலிந்து விளங்கிடப் பிரார்த்திக்கின்றோம்

உன்பிரிவால் வாடும்
அப்பா, அம்மா ,அண்ணன்மார், அக்காமார்.
அத்தான்மார் மற்றும் உற்றார், உறவினார்
நண்பர்கள். (சி/4491)

## 5 - ம் ஆண்டு நினைவஞ்சலி



(அச்சுவேலியில் அரசபடையோடு ஏற்பட்ட நேரடி மோதலில் வீரமரணமடைந்த)

### லெப். க. நவநிதி (பவான்)

வீரத்தாயின் மடியில்: 23 - 04 - 1966

வீரமண்ணில்: 06 - 06 - 1987

கூலிப்படைகள் கூவென்றோடிட
குண்டுகள் தீர்த்த இளம்புலி நவநிதி
சிறிப்பாயும் சீற்றம் கொண்டுமே
மாற்றான் படையை சல்லடை போட்டனன்
ஊற்றாய் வீர உணர்வுகள் நிரம்பிய
மேஜர் அல்பேட்டின் சகோதரன் இவனோ
வேகம் குறையா வீறுகொள் வேங்கை
மோகத் தமிழில் தாகங் கொண்டவன்
பாவந் தேடும் பாதகப் படையினர்
மறைவினில் ஏவிய மாயக் குண்டினை
மார்பினில் ஏற்று மரபினைக் காத்த
தியாகியின் ஆத்மா சாந்தி கொண்டிடவே
ஈழம் மீட்கும் சக்தியாய் மாறுவோம்.

உன் பிரிவால் வாடும் :
பெற்றோர்,சகோதரர்கள். அண்ணிமார்,
உறவினர்கள், நண்பர்கள்

அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி. (2632)

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னையின் மடியில் 08 - 07 - 1968

அரக்கர் பிடியில் 14 - 06 - 1990

### ஆ. ஸ்ரீவிஸ்ணுகாந்தா (காந்தன்)

தொழில் நுட்ப உத்தியோகத்தர் - நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை, கிளிநொச்சி.

ஆசை மகனே அன்பான கண்மணியே
நேசத் துரையே நேர்மை மிகு எம்தவமே
அன்பின் கனியே ஆருயிரே எம் காந்தா!
ஈராண்டு சென்றாலும் உன் நினைவை நாம்
- மறவோம்

ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்

அம்பாள் வளவு,
குமரபுரம்,
பரந்தன். (2635)

இவரின் பிரிவால் துயருறும்
மனைவி, தாய், தந்தை,
சகோதரர்கள்

## நினைவு கூருகின்றோம்...

### 1992-06-06

1985 ஆம் ஆண்டு இதேதினத்தில் திருக்கோணமலை கந்தளாய்ப் பகுதியில் சுற்றிவளைப்பை மேற்கொண்ட சிறிலங்காப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 23 தமிழர்கள்.

1986 ஆம் ஆண்டு திருக்கோணமலையில் பேருந்தில் பயணம் செய்து கொண்டிருந்தபோது சீனன்வாடிப் பகுதியில் வைத்து சிறிலங்காப் படையினரால் கடத்திச் செல்லப்பட்டுக், காணாமல் போன 6 வயதுக் குழந்தை உட்பட 9 தமிழர்கள்.

பலாலி இராணுவ முகாமுக்கு அடகு நகை எடுக்கப் போனபோது சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட உலங்கு வானூர்தித் தாக்குதலில் கொல்லப்பட்ட 2 தமிழர்கள்.

1987 ஆம் ஆண்டு அச்சுவேலியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலில் வீரச்சாவெய்திய -

லெப். மார்க்கண்டு (கந்தையா கனகரத்தினம் - முழங்காவில், மன்னார்.)

லெப். பவான் (கந்தையா நவநிதி - ரூபதநிதி வீதி, அச்சுவேலி தெற்கு, ஆவரங்கால்.)

லெப். ரகு (இராசதுரை ரகு - 36/4, இராமநாதன் வீதி, யாழ்ப்பாணம் )

2-ம் லெப். அச்சுதன் (ஈஸ்வரலிங்கம் குமாரலிங்கம் - வல்வெட்டித்துறை )


குமணன் (சதாசிவம் ரங்கநாதன் - தம்பனை, அளவெட்டி.)

## 45ஆம் நாள் நினைவஞ்சலி



## 45-ம் நாள் நினைவஞ்சலி





நாம் மறவோம் உன் திருமுகத்தை
கொம்படி மண்ணில் துடிதுடித்து வீழ்ந்திட்டகாந்தியே
நீ விண்ணில் பொலிந்து விளங்கிடப் பிரார்த்திக்கின்றோம்

உன்பிரிவால் வாடும்
அப்பா, அம்மா, அண்ணன்மார், அக்காமார்,
அத்தான்மார் மற்றும் உற்றார், உறவினார்
நண்பர்கள். (சி/4491)

---

Level I course illustrates type of proficiency required Provides guidance for exercises.

Price ; Rs 25/-
Available at External Degree Unit
University of Jaffna.

(சி/4510] Registrar

---

மறைவினில் ஏவிய மாயக் குண்டினை
மார்பினில் ஏற்று மரபினைக் காத்த
தியாகியின் ஆத்மா சாந்தி கொண்டிடவே
ஈழம் மீட்கும் சக்தியாய் மாறுவோம்.

உன் பிரிவால் வாடும் :
பெற்றோர், சகோதரர்கள், அண்ணிமார்,
உறவினர்கள், நண்பர்கள்

அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி. ( 2632 )

---

# 45 ஆம் நாள் நினைவஞ்சலி



சுவிஸில் காலமான
**சண்முகம் மகாலிங்கம்**

தோற்றம் 22-11-1951 மறைவு 23-04-1992

அன்பான அம்மாச்சியின் அரிதான பேரனே!
அன்னையின் அருந்தவமே! அணையா அகல்விளக்கே!
குடும்பத்தின் குலவிளக்கே குன்றாத பண்பரசே
அன்பான சோதரிகளின் அருமைத்தம்பியே! அண்ணாவே
பண்பான மைத்துனர்களின் மாண்புமிகு மைத்துனரே
கண்மணிகளாம் மருமக்களின் மாமாவே! மாமாவே!
சிற்றன்னைமார் மாமாவின் செல்வத்திருக்குமரா
சிறிய சோதரர்கள் சிறகொடிந்து கதறியழ
செல்வம் நிறை சுவிஸ் நாட்டால் கல்நெஞ்சக்காலன்
கண்மைப் போதினிலே கவர்ந்தானே!
கதறி அழுகிறோம் அவனியிலே எந்நாளும்!!

உமை ஈசன் பாதமதில் உங்கள் ஆத்மா ஈடேற
வேண்டிப் பிரார்த்திக்கும்

தகவல்:-


திரு. திருமதி கோபால்ராசா
161J/3 திருவையாறு,
கிளிநொச்சி.

அன்பின் பேர்த்தி
அருமை அம்மா
சகோதர சோதரிகள்,
மைத்துனர், மருமக்கள்,
சிறியதாய்மார், மாமா,
உற்றார், உறவினர்,
நண்பர்கள்.


(சி/4489)

---

# 45-ம் நாள் நினைவஞ்சலி



பெரியபுலம் மகா வித்தியாலய
மாணவன்
**சசிகுமார் (கண்ணன்)**
மலர்வு 5.10.1975 உதிர்வு 23.4.1992



கொக்குவில் இந்துக்கல்லூரி
மாணவன்
**றஞ்சித்குமார் (றஞ்சன்)**
மலர்வு 20.2.1977 உதிர்வு 23.4.1992

அன்பினில் உயர்ந்தோர்
அழிவினில் இணைந்தே சென்றார்,
பொய்யர்கள் வைத்த கண்ணியில்
பொன்னான சோதரரும் சிக்கியே
மண்ணில் துடி துடித்து மாண்டனர் அம்மா
நாளும் நல்லதை எண்ணும் தங்கராவிற்கும்
நலிந்தவருக்கு உதவிடும் பாக்கியவதிக்கும்
கூடியே பிறந்தனர் அம்மா
ஈருடல் ஒருயிராய் இணைந்த சகோதரர்
சசிகுமார், றஞ்சித்குமார் இறப்பிலும் ஒன்றாக சேர்ந்தார் அம்மா
கொம்படி மண்ணில் துடிதுடித்து வீழ்ந்தனர்
காட்டிக் கொடுக்கும் கயவர்களால்
இரத்தம் சிந்திய தமிழ் செல்வங்களை
இன்று விண்ணில் அவர்கள் பொலிந்து விளங்கிட
உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம். சாந்தி! சாந்தி! சாந்தி!

எங்கள் அன்பு செல்வங்களே உங்கள் பிரிவால் வாடும்
அப்பா, அம்மா, தம்பிமார், தங்கைமார், அப்பு அம்மம்மா, அப்பம்மா,
மாமா, மாமி, சின்னையா, சித்தி, சித்தப்பா, அன்ரி
மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள்

தட்டுவான்கொட்டி,
ஆனையிறவு. [சி-4492]

---

கொண்ட உலங்கு வானூர்தித் தாக்குதலில் கொல்லப்பட்ட 2 தமிழர்கள்.

1987 ஆம் ஆண்டு அச்சுவேலியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலில் வீரச்சாவெய்திய -

**லெப். மார்க்கண்டு** (கந்தையா கனகரத்தினம் - முழங்காவில், மன்னார்.)

**லெப். பவான்** (கந்தையா நவநிதி - ரூபதநிதி வீதி, அச்சுவேலி தெற்கு, ஆவரங்கால்.)

**லெப். ரகு** (இராசதுரை ரகு - 36/4, இராமநாதன் வீதி, யாழ்ப்பாணம் )

**2-ம லெப். அச்சுதன்** (ஈஸ்வரலிங்கம் குமாரலிங்கம் - வல்வெட்டித்துறை )

**குமணன்** (சதாசிவம் ரங்கநாதன் - தம்பனை, அளவெட்டி.)

**நீதவான்** (நடராசா சிறிஸ்கந்தராசா - நவாலி வடக்கு)

**பூபன்** (தங்கய்யா சக்திவேல் - 2-ம் குறுக்குத் தெரு குருநகர், யாழ்ப்பாணம் )

கொல்லன்கலட்டியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலில் வீரச்சாவெய்திய -

**லவன்** (சந்திரசேகரம் லவக்குமார் - லவக்குமார்வீதி, அரியாலை )

யாழ் கோட்டைப் பகுதியில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட மின்சார விபத்தில் எமைப் பிரிந்த -

**மோகன்** (சின்னத்துரை யோகேந்திரன் - தாவடி)

இதேஆண்டு சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட நடவடிக்கைகளின்போது படுகொலை செய்யப்பட்ட 8 பெண்கள் உட்பட 25 க்கும் மேற்பட்ட தமிழர்கள்.

1988 ஆம் ஆண்டு மட்டக்களப்பில் தேச விரோத சக்திகளினால் சுட்டுக் கொல்லப்பட்ட அப்பகுதி பிரஜைகள் குழுத் தலைவர்.

1989 ஆம் ஆண்டு தம்பசிட்டியில் இந்தியப் படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய -

**ராஜன் | விசு** (ஏரம்பமூர்த்தி - வி. எம். வீதி, பருத்தித்துறை.)

இதே சம்பவத்தில் வீரச்சாவெய்திய - நாட்டுப்பற்றாளரான -

**கிருபா** (நடராசா கிருபாகரன் - பத்திரகாளி கோவில் ஒழுங்கை, பருத்தித்துறை )

1991 ஆம் ஆண்டு ஆனையிறவில் சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலில் வீரச்சாவெய்திய -

**துஷ்யந்தன்** (சு. பாஸ்க்கரன் - புதுக்குடியிருப்பு, மட்டக்களப்பு.)

மன்னார் சிலாபத்துறைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடி மோதலில் வீரச்சாவெய்திய -

**றேணு** (கறுப்பையா விஜயரட்ணம் - யாழ்ப்பாணம்)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**தமிழீழ விடுதலைப் புலிகள்**
(சி/4514)

## சிந்தனைக்கு

வேலிகள் ஒழுங்காக அமைக்கப்பட்டால்தான் அயல் வீட்டுக்காரர்கள் நன்றாக இருப்பார்கள்.

— ஆல்பிரெட் நார்த் வைட்ஹெட்

ஈழநாதம்

51, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 06-06-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2889 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் 05

## பேரணியாய் தமிழ்மக்கள்

சிறிலங்கா அரசாங்கத்தின் கண்மூடித்தனமான நடவடிக்கைகளைக் கண்டித்து, பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் கலந்து கொண்ட மாபெரும் பேரணி ஒன்றை நேற்று சர்வசமய நிறுவனங்களின் ஒன்றியம் நடத்தியது. ஆலயங்கள் மீது திட்டமிட்டு மேற்கொள்ளப்படும் காட்டுமிராண்டித் தனமான தாக்குதல்களைக் கண்டித்தே இம் மாபெரும் பேரணி நடத்தப்பட்டது.

தமிழ்மக்கள் அனைவரும் ஒரேகுரலில் தமது கண்டனத்தை வெளிப்படுத்திய பேரணியாக இது இருந்தது. இப்பேரணியில் இந்து, கிறிஸ்தவ மதங்களைச் சார்ந்தவர்கள் பங்கு கொண்டார்கள். தொழிலாளர்கள், முதலாளிகள் என்ற வேறுபாடு இன்றி உழைப்போர் பங்கு கொண்டனர். மாணவர்களில் இருந்து பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் வரை கலந்து கொண்டனர். சிறுவர்களில் இருந்து பெரியவர்கள் வரை பங்கு கொண்டனர். அதாவது தமிழ் மக்களின் சகல பிரிவினரும் இப்பேரணியில் கலந்து கொண்டார்கள்.

இப்பேரணி யுத்தத்தின்போது குறைந்தளவு மனித நேயத்தையாவது கடைப்பிடிக்குமாறு சிறிலங்கா அரசைக் கோருகின்றது. திக்கற்ற, போக்கிடமின்றி அகதி முகாம்களில் தங்கியுள்ள அப்பாவி மக்கள் மீதும், மக்களின் போற்றுதற்குரியவையும் வணக்கத்திற்குரியதுமான ஆலயங்கள் மீதும், நோயினாலும், பிணியினாலும் துன்புறும் மக்கள் சிகிச்சை பெறும் வைத்திய சாலைகள் மீதும் தாக்குதல் நடத்துவதையும் இப் பேரணி கண்டிக்கின்றது.

இப்பேரணி மேற்கூறப்பட்டவற்றை அடிப்படையாகக் கொண்டு நடத்தப்பட்டிருப்பினும் ஒட்டுமொத்தமாகத் தமிழ் மக்கள் மீது சிறிலங்கா இராணுவம் மேற்கொண்டுள்ள இனப் படுகொலையையும், கலாசார அழிப்புக்களையும் வன்மையாகக் கண்டித்தே இப் பேரணி நடத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு நடந்த இம் மாபெரும் பேரணி சிறிலங்கா அரசிற்கும், உலகிற்கும் ஒன்றைத் தெளிவாக வெளிக்காட்டியுள்ளது. அதாவது தமிழ் மக்கள் அடக்குமுறைக்கு எதிரான நடவடிக்கைகளில் எப்பொழுதும் ஒரே அணியில் உள்ளனர் என்பதும், அடக்குமுறைக்குத் தமிழ் மக்கள் பணிந்துவிடப் போவதில்லை தொடர்ந்தும் போராடுவார்கள் என்பதுமே இதுவாகும்.

## ஓய்வுபெற்ற தோ. தொழிலாளர்கள்

# மத்திய அமைச்சர்களைப் புறக்கணிக்க கோரிய ஜெயலலிதா இன்று வானளாவப் புகழ்கிறார்

(சென்னை)

மத்திய அமைச்சர்களை புறக்கணியுங்கள் என்று அறிக்கை விட்ட தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா அரசாங்க விழாக்களில் சமீப காலமாக மத்திய அமைச்சர்களுக்கு வக்காலத்து வாங்கி மத்திய அமைச்சர்களை வானளாவப் புகழ்கின்றார் என்று தி.மு.க. தலைவர் மு. கருணாநிதி தெரிவித்துள்ளார்.

முரசொலி பத்திரிகைக்கு பேட்டியளித்த கருணாநிதி இதனைத் தெரிவித்தார். ஜெயலலிதா இவ்வாறு மத்திய அமைச்சர்களை புகழ்வதற்கான காரணமும் எனக்குத் தெரியும் எனக் குறிப்பிட்டார்.

வருமான வரித் துறையினர் முதலவரின் தோழியின் வீட்டில் சோதனை நடத்தி பல கோடி ரூபாய்களை கைப்பற்றியதும், டில்லியின் அவரது உத்தரவினால் அது நிறுத்தப்பட்டதும் அதன் காரணமாக அந்த அதிகாரிகள் சென்னையிலிருந்து மாற்றப்பட்டதும் பத்திரிகைகளில் வெளிவந்துள்ளதே! மத்திய அரசின் இந்த மகத்தான உதவிக்கு ஜெயலலிதா நன்றி காட்ட வேண்டாமா? அதற்காகத்தான் இவ்வாறு அவர் மத்திய அமைச்சர்களை புகழ்ந்தார் என்றும் கருணாநிதி குறிப்பிட்டார்.

### அதற்கு காரணமும் உண்டு

### - முரசொலியில் மு. கருணாநிதி

அவர் அளித்த பேட்டியில் மேலும் தெரிவித்திருப்பதாவது;

கேள்வி:-

சபாநாயகர் சேடப்பட்டி முத்தையா தமிழக சட்டப் பேரவையில் சுப்ரீம் கோர்ட்டுக்கு எதிராக எடுத்துள்ள நிலையை ஆதரித்து எட்டு மாநில சட்டசபை சபாநாயகர்கள் தந்தி கொடுத்துள்ளார்களே?

பதில்:-

அந்த எட்டுப்பேரில் ஒருசபாநாயகர் அதாவது கேரள சபாநாயகர் மறுப்புக் கொடுத்துள்ளார். எஞ்சியுள்ளவர்கள் எப்போது மறுப்பார்களோ தெரியாது. எட்டு சபாநாயகர்கள் முத்தையாவுக்கு ஆதரவென்ற செய்தியில் ஒரு வேடிக்கை பார்த்தீர்களா? எங்கேயோ இருக்கிற சிக்கிம் சபாநாயகர் கூடஇவர் நிலையை ஆதரித்து தந்திஅனுப்பி இருக்கும்போது மிக அருகாமையில் தமிழ்நாட்டுடன் ஒட்டிக் கொண்டிருப்பதும், அ. தி. மு. க. ஆதரவுடன் ஆட்சிநடத்துவதுமானபுதுவை மாநிலத்து சபாநாயகர் தனது ஆதரவை தந்தி மூலமோ அல்லது தொலைபேசி மூலமோ தெரிவிக்கவில்லையே.

அத்துடன், இத்தனை சபாநாயகர்கள் தமிழக சபாநாயகர் நிலைக்கு ஆதரவு தெரிவித்த பிறகும் கூட இன்னமும் தமிழக சபாநாயகர் உச்ச நீதி மன்ற தடை ஆணைக்கு மாறாக வாரமலர்நிருபர் சுனிலையோ, கோவைமாலை முரசு ஆசிரியர் சுந்தரையோ கைது செய்து தன்முன்னால் நிறுத்த பிறப்பித்த சபாநாயகர் முத்தையாவும், சுனிலும், சுனிலைக் கைதுசெய்ய டில்லிக்குபயணம் செய்த பொலிஸ் அதிகாரிகளும் டில்லியில் இருந்து ஒரே விமானத்தில் சென்னைக்கு வந்தது தான் இந்த ஆண்டின் பெரிய நகைச்சுவையாகும்; என்றும் கருணாநிதி தனது பேட்டியில் குறிப்பிட்டார்.

# இந்திய நிதியமைச்சர் பதவி விலக வங்கிகள் சங்கம் கோரிக்கை

[டில்லி]

நிதி அமைச்சர் மன் மோகன் சிங் பதவி விலக வேண்டும் என்று அனைத்து இந்தியவங்கிகள் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது. அதேபோல் இந்திய ரிசேர்வ் வங்கியின் ஆளுநர் ஆர். வெங்கட்ராமனும் பதவியிலிருந்து விலக்கப்பட வேண்டும் என்று வங்கி ஊழியர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

வங்கிகள் சட்டத்தை மீறி பங்குச் சந்தையில் பெரும் புள்ளியான மேத்தாவுக்கு, இந்திய மற்றும் வெளிநாட்டு வங்கிகள் நிதி வழங்கியதைத் தொடர்ந்தே மேற்படி கோரிக்கை விடப்பட்டுள்ளது.

இதற்கிடையில், மத்திய புலனாய்வுப் பிரிவு மேத்தா மீது குற்றவியல் சட்டத்தின் கீழ் பல வழக்குகளைத் தாக்கல் செய்துள்ளது. வங்கிமுகாமையாளர் பலர் மீதும் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

மேலும் ரிசேர்வ் வங்கியின் ஆளுநர் ஆர். வெங்கட்ராமன் கட்டாய ஓய்வில் அனுப்பப்பட்டுள்ளார்.

## குடியரசு தலைவர் தெரிவில் பொதுக்கருத்து எட்டப்படும்

### -இந்.மாக்சிய கம்யூனிஸ்ட்கட்சி நம்பிக்கை

(டில்லி)

இந்தியாவின் புதிய குடியரசுத் தலைவரையும், உப குடியரசுத் தலைவரையும் தெரிவு செய்வதில் பொதுக் கருத்து எட்டப்படும் எனத்தான் நம்புவதாக இந்திய மார்க்சிஸ கம்யூனிஸ்ட கட்சியின் பொதுச் செயலாளர் ஹர்ஹிசன் சிங் சுர்ஜித் கூறியுள்ளார்.

நேற்று முன்தினம் புதுடில்லியில் இடதுசாரிக் கட்சிகளும், தேசிய முன்னணியும் பிரதமர் நரசிம்மராவைச் சந்தித்துப் பேசிய பின்னர் செய்தியாளர்களிடையே பேசிய அவர் நாட்டின் உயர் பதவிக்கு தெரிவு செய்யப்படும் போது ஜாதி, இன, மத அரசியல் வேறுபாடுகளுக்கு இடமளிக்கப்படக் கூடாது எனவும் தெரிவித்தார்.

## பிஜீயின் அரசியல் சாசனத்தை மறுபரிசீலனை செய்ய இந்தியா கோரிக்கை

இந்தியப் பூர்வீக குடியினருக்கு அதிகாரம் வழங்க மறுக்கும் பிஜீ நாட்டின் அரசியல் சாசனத்தை உடனடியாக மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று இந்திய அரசு கோரி ...ளைப் போக்க பிஜீ அரசு விரைவில் நடவடிக்கை எடுக்கும் என்று நம்பிக்கையும் வெளியிட்டார்.

இனப்பாகுபாடின்றி எல்லா பிஜீ மக்களும் சுதந்திரமான

## இயற்கையைப் பாதுகாக்க இந்தியப் பிரதமர் அழைப்பு

உலகில் இன்று வாழும் மக்களுக்கும், இனிப்பிறக்க இருக்கும் சந்ததியினருக்கும் இயற்கையின் அரவணைப்பு கிடைப்பதற்கு இயற்கையைப் போற்றிப் பாதுகாக்க மக்கள் உறுதி நிற்க முன்வரவேண்டும் என்று இந்தியப் பிரதமர் பி. வி நரசிம்மராவ் கேட்டுக்கொண்டுள்ளார்.

உலக சுற்றுச் சூழல் தினம் நேற்றுக் கடைப்பிடிக்கப்பட்டதை முன்னிட்டு அவர் விடுத்திருக்கும் செய்தியில் மேலும் கூறியிருப்பதாவது; இருப்பது ஒரே பூமிதான். அதைப் பாதுகாக்கவும், பகிர்ந்து கொள்ளவும் அனைவரும் முன்வர வேண்டியது அவசியம் எனவும் குறிப்பிட்டுள்ளார். அத்துடன் நம்மை வாழவைப்பது பூமியாகும். அதன் வளத்தைப் பொறுத்ததுதான் மனிதகுலத்தின் வாழ்வு. ஆனால் வளமும் வளர்ச்சியும் பெறவேண்டும் என்ற வேகத்தினால் மனித குலத்தின் சிந்தனையற்ற போக்கின் காரணமாக உலகின் சுற்றுச் சூழல் பாதிக்கப்பட்டிருக்கின்றது என்றும், வளமிக்க உயிரின வகைகளும், இயற்கை வளங்களும் இனி இல்லாமற் போய்விடுமோ என்ற அபாயத்துக்குள்ளாகியுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

மேலும் சுற்றுச் சூழலுக்கு அபாயத்தை ஏற்படுத்தாமல் நமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதே உண்மையான முன்னேற்றம் என்பதை உணர்ந்து முன்னேற்றப் பாதையை கண்டறிவதே இப்போது நமக்கு விடுக்கப்பட்டுள்ள அறைகூவல் எனவும் அவர் தெளிவுபடுத்தியுள்ளார். இதுவரை சாதிக்கப்பட்டவற்றையும், இனிமேல் சாதிக்கப்படவேண்டியவற்றையும் சிந்தித்து செயற்பட உலக சுற்றுச் சூழல் தினம் வழிவகுக்கும் எனவும் தெரிவித்துள்ளார்.

# சதாம் ஹுசைனைப் பதவி கவிழ்க்க சி.ஐ.ஏ.இற்கு நிதி ஒதுக்கீடு அதிகரிப்பு

[லொஸ்ஏஞ்சல்ஸ்]

ஈராக்கிய ஜனாதிபதி சதாம் ஹுசைனைப் பதவி கவிழ்ப்பதற்கு உதவும் அந்தரங்க நடவடிக்கைகளுக்காக அமெ... பட்ட படுதோல்வியின் பின்னரும் கூடச் சதாம் ஹுசைன் வெள்ளை மாளிகையின் எதிர்பார்ப்புக்கள் சகலதையும் சிதறடித்து தொடர்ந்தும் அதி... வடிக்கைகளுக்கு நான்குகோடி டொலர்கள் செலவு செய்யப்பட வேண்டும் என அமெரிக்க நிர்வாகம் வேண்டுகோள் விடுத்துள்ளது என்றும் டைம்ஸ்

இப்பேரணி மேற்கூறப்பட்டவற்றை அடிப்படையாகக் கொண்டு நடத்தப்பட்டிருப்பினும் ஒட்டுமொத்தமாகத் தமிழ் மக்கள் மீது சிறிலங்கா இராணுவம் மேற்கொண்டுள்ள இனப் படுகொலையையும், கலாசார அழிப்புக்களையும் வன்மையாகக் கண்டித்தே இப்பேரணி நடத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு நடந்த இம்மாபெரும் பேரணி சிறிலங்கா அரசிற்கும், உலகிற்கும் ஒன்றைத் தெளிவாக வெளிக்காட்டியுள்ளது. அதாவது தமிழ் மக்கள் அடக்குமுறைக்கு எதிரான நடவடிக்கைகளில் எப்பொழுதும் ஒரே அணியில் உள்ளனர் என்பதும், அடக்குமுறைக்குத் தமிழ் மக்கள் பணிந்துவிடப் போவதில்லை தொடர்ந்தும் போராடுவார்கள் என்பதுமே இதுவாகும்.

## ஓய்வுபெற்ற தோ. தொழிலாளர்கள்

# குடியிருப்புக்களில் வாழ இ. தொ. கா. நடவடிக்கை

[கண்டி]

ஓய்வுபெற்ற தோட்டத் தொழிலாளர்களும், தற்காலிகமாகத் தோட்டங்களில் வேலை செய்யும் தொழிலாளர்களும் தொடர்ந்தும் அவர்கள் வாழும் குடியிருப்புக்களிலேயே வாழ அனுமதிக்கப்படுவர். இவ்வாறானவர்களை வீட்டை விட்டு வெளியேற்ற முடியாது. அதேவேளை தோட்ட நிர்வாகங்கள் இவர்கள் மேல் மேற்கொண்டுள்ள வழக்குகள் அனைத்தும் வாபஸ் பெறப்படும்.

இதற்கான ஏற்பாடுகளைக் கிராமியத் தொழிற்துறை அமைச்சர் எஸ். தொண்டமான் செய்துள்ளதாக இ. தொ.கா.வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இது தொடர்பாக அரச உயர் மட்டங்களுடன் பேச்சுவார்த்தை நடாத்தப்பட்டே மேற்கண்ட முடிவு எடுக்கப்பட்டதாகவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அரசாங்கம் தோட்ட நிர்வாகங்களைத் தனியார் கம்பனிகளிடம் கையளிக்கவுள்ளது. இவ்வாறான ஒரு சூழ்நிலையில் தோட்ட நிர்வாகங்கள் நோயாளியாக இருக்கும் தொழிலாளியைக் கூட தனது குடியிருப்பில் இருந்து அப்புறப்படுத்த முயல்கின்றன. இவ்வாறான செயல்களை அனுமதிக்க இயலாது எனத் தொண்டமான் தெரிவித்ததாகவும், இது தொடர்பாக வீடுகளும், அதனைச் சுற்றியுள்ள காணி தொடர்பாகவும் சில தீர்க்கமான முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் இ. தொ. கா, வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

# குப்பி விளக்கு தீப்பற்றி மூவர் எரிகாயம்

(யாழ்ப்பாணம்)

குப்பிவிளக்கு தவறி வீழ்ந்ததில் ஏற்பட்ட தீயில் சிக்கி ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் எரிகாயங்களுக்குள்ளாகி ஆபத்தான நிலையில் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

யாழ் ஆஸ்பத்திரி வீதியைச் சேர்ந்த புஸ்பராசா (வயது 37) இவரது மனைவி புலோமினா (வயது 35) ஐடிலராணி (வயது 12) ஆகியோர் இரவு படுத்திருந்த போது குப்பிவிளக்கு தட்டுப்பட்டு உடையில் பற்றிக் கொண்டதாக தெரிவிக்கப்படுகிறது. இதனால் இவர்கள் மூவரும் எரிகாயங்களுக்குள்ளாகினர்.

[ச]

# சையிக்கில் ஓட்டப்போட்டி

தமிழீழ எல்லைக் குட்பட்ட அனைத்து விளையாட்டு வீரர்களும் கலந்து கொள்ளும் மாபெரும் மரதன், சைக்கிள் ஓட்டப்போட்டி ஒன்று எதிர் வரும் 20 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

நவாலி வடக்கு சனசமூக நிலையத்தினரால் நடாத்தப் படவுள்ள இப்போட்டிகளில் 75 மைல் தூர சைக்கிள் ஓட்டப்போட்டியும் 20 மைல் தூர மரதன் ஓட்டப்போட்டியும் இடம் பெறவுள்ளது.

யாகத் தலைவரையும் தெரிவு செய்வதில் பொதுக் கருத்து எட்டப்படும் எனத்தான் நம்புவதாக இந்திய மார்க்சிஸ கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் ஹர்ஹிசன் சிங் சுர்ஜித் கூறியுள்ளார்.

நேற்று முன்தினம் புதுடில்லி பேசிய பின்னர் செய்தியாளர்களிடையே பேசிய அவர் நாட்டின் உயர் பதவிக்கு தெரிவு செய்யப்படும் போது ஜாதி, இன, மத அரசியல் வேறுபாடுகளுக்கு இடமளிக்கப்படக் கூடாது எனவும் தெரிவித்தார்.

## பிஜீயின் அரசியல் சாசனத்தை

# மறுபரிசீலனை செய்ய இந்தியா கோரிக்கை

இந்தியப் பூர்வீக குடியினருக்கு அதிகாரம் வழங்க மறுக்கும் பிஜீ நாட்டின் அரசியல் சாசனத்தை உடனடியாக மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று இந்திய அரசு கோரிக்கை விடுத்துள்ளது.

இது பற்றி புதுடில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய இந்திய வெளியுறவு அமைச்சக அதிகாரி மேலும் கூறுகையில் அந்நாட்டு அரசியல் சாசனத்தின் பாரபட்சமான தன்மைகளைப் போக்க பிஜீ அரசு விரைவில் நடவடிக்கை எடுக்கும் என்று நம்பிக்கையும் வெளியிட்டார்.

இனப்பாகுபாடின்றி எல்லா பிஜீ மக்களும் சுதந்திரமான சமத்துவச் சூழலில் வாழ இதுவே வழிவகுக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

பிஜீயின் சனத்தொகையில் ஐம்பது சதவிகிதத்தினர் இந்திய சமூகங்களை சேர்ந்த மக்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# சகாரா ஆபி. நாடுகளுக்கு தொழில் வளநாடுகள் உதவி

கடுமையான வரட்சியினால் பாதிக்கப்பட்டுள்ள பத்து துணை சகாரா ஆபிரிக்க நாடுகளுக்கு ஐம்பத்திரண்டு கோடியே அறுபது லட்சம் டொலர் பெறுமதியான உதவி அளிப்பதாக தொழில் வளம் மிக்க நாடுகள் வாக்குறுதி அளித்துள்ளன.

ஐ.நா. வின் தலைமைச் செயலர் பூட்டர்ஸ் காலி எண்பத்தைந்து கோடியே அறுபது இலட்சம் டொலர் உதவியை அளித்திடுமாறு கோரி கடந்த வாரம் வேண்டுகோள் ஒன்றை விடுத்திருந்தார்.

ஆபிரிக்காவில் சில பகுதிகளில் வரட்சியின் காரணமாக அறுவடைப் பயிர்கள் அழிந்து போய்விட்டன சுமார் ஒரு கோடியே எண்பது இலட்சம் பேர் பட்டினி, சத்துணவுக் குறைவு என்பவற்றினால் பாதிக்கப்படக் கூடிய அபாயமே இப்பொழுதும் காணப்படுகிறது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# அரச நிர்வாக கட்டமைப்பு பின்நோக்கிச் செல்கிறது

## -விஞ்ஞான கூட்டுக்குழு அறிவிப்பு

(கொழும்பு)

நாட்டின் பொருளாதார வளர்ச்சியைத் துரிதப்படுத்தும் நோக்கத்துடன் அரச நிர்வாக அமைப்பில் இறுதியாகச் செய்யப்பட்ட கட்டமைப்பு மாற்றம், ஆரம்பத்திலிருந்தே பின்நோக்கிச் செல்வதாகதொழில் நுட்ப, விஞ்ஞான மற்றும் மருத்துவர்களின் கூட்டுக்குழு வெளியிட்டுள்ள பத்திரிகைச் செய்திக் குறிப்பொன்று கூறுகின்றது.

ஒட்டு மொத்தமாகப் பார்த்தால், இது தற்கொலைக்கொப்பானதாகும் என்று அந்த அறிக்கை அச்சம் தெரிவிக்கிறது.

# தந்தையின் அழுகிய சடலத்துடன்

# ஆறு நாட்களைக் கழித்த மூன்று வயதுச் சிறுவன்

(லண்டன்)

ஆறு நாட்களாக தந்தையின் அழுகிய சடலத்துடன் காணப்பட்ட மூன்று வயது நிரம்பிய மகன் லண்டனில் மூடிக்கிடந்த வீடொன்றிலிருந்து மீட்கப்பட்டான்.

லண்டன் மேற்குப் பகுதி ஈலிங்கில் 36 வயது உள்ள சீமஸ் ஸ்கென்லன் சாய்வு நாற்காலியில் இறந்து கிடக்கக் காணப்பட்டார்.

வீடு முழுவதும் நாற்றம் வீசிக் கொண்டிருந்ததை அடுத்து அண்டைய வீட்டுக்காரரின் தகவலின் பேரில் பொலிசார் நடவடிக்கை எடுத்தனர்.

வீட்டிலிருந்த மரக்கறிகளையும் பட்டரையும் இவ் ஆறு நாளும் இச் சிறுவன் சாப்பிட்டுள்ளான் எனத்தெரியவந்தது.

ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட மேற்படி சிறுவன் குணமடைந்து வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மையாளர் பலர் மீதும் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

மேலும் ரிசேர்வ் வங்கியின் ஆளுநர் ஆர். வெங்கட்ராமன் கட்டாய ஓய்வில் அனுப்பப்பட்டுள்ளார்.

வேண்டியது அவசியம் எனவும் குறிப்பிட்டுள்ளார். அத்துடன் நம்மை வாழவைப்பது பூமியாகும். அதன் வளத்தைப் பொறுத்துதான் மனிதகுலத்தின் வாழ்வு. ஆனால் வளமும் வளர்ச்சியும் பெறவேண்டும் என்ற வேகத்தினால் மனிதனுள்ள அறைகூவல் எனவும் அவர் தெளிவுபடுத்தியுள்ளார். இதுவரை சாதிக்கப்பட்டவற்றையும், இனிமேல் சாதிக்கப் படவேண்டியவற்றையும் சிந்தித்து செயற்பட உலக சுற்றுச் சூழல் தினம் வழிவகுக்கும் எனவும் தெரிவித்துள்ளார்.

# சதாம் ஹுசைனைப் பதவி கவிழ்க்க சி.ஐ.ஏ.இற்கு நிதி ஒதுக்கீடு அதிகரிப்பு

[லொஸ்ஏஞ்சல்ஸ்]

ஈராக்கிய ஜனாதிபதி சதாம் ஹுசைனைப் பதவி கவிழ்ப்பதற்கு உதவும் அந்தரங்க நடவடிக்கைகளுக்காக அமெரிக்க மத்திய புலனாய்வு நிறுவனத்தின் [சி. ஐ ஏ] ஒரு கோடி ஐம்பது லட்சம் டொலர்கள் செலவுத் திட்டத்தை மூன்று மடங்காக அதிகரிக்க அமெரிக்க நிர்வாகம் உத்தேசித்திருக்கிறது என்று 'லொஸ் ஏஞ்சல்ஸ் டைம்ஸ்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

ஈராக்கிய ஜனாதிபதிக்கு எதிராக 1991 மே இல் ஆரம்பிக்கப்பட்ட திட்டத்திற்கே இந்த மேலதிக நிதி ஒதுக்கப்படும் என்று அமெரிக்க நிர்வாக வட்டாரங்கள் டைம்ஸுக்குத் தெரிவித்ததாகவும், வளைகுடாப் போரில் ஏற்பட்ட படுதோல்வியின் பின்னரும் கூடச் சதாம் ஹுசைன் வெள்ளை மாளிகையின் எதிர்பார்ப்புக்கள் சகலதையும் சிதறடித்து தொடர்ந்தும் அதிகாரத்தில் இருக்கின்றார். இதுவரையான சி.ஐ.ஏ. யின் அந்தரங்க செயற்பாடுகள் அவரின் அதிகாரத்தை நிலைகுலையச் செய்யக் கூடியவையாக இருக்கவில்லை இதையடுத்தே சி.ஐ.ஏ. யின் நடவடிக்கைகளுக்கு நான்குகோடி டொலர்கள் செலவு செய்யப்பட வேண்டும் என அமெரிக்க நிர்வாகம் வேண்டுகோள் விடுத்துள்ளது என்றும் டைம்ஸ் தெரிவித்தது.

இதேநேரம் சதாம் ஹுசைன் காலவரையறையின்றி அதிகாரத்தில் இருக்கக் கூடும் என புஷ் நிர்வாகத்திற்கு சிரேஷ்ட அமெரிக்க அவதானிகள் கூறியிருக்கின்றனர்.

# கண்ணி வெடியில் 17 பொலிசார் பலி

மத்திய பிரதேசத்தில் நேற்று முன்தினம் வீதியில் புதைக்கப்பட்டிருந்த கண்ணி வெடி வெடிக்க வைக்கப்பட்டதால் பதினேழு பொலிசார் கொல்லப்பட்டனர். இரு பொலிஸ்காரர் காயமடைந்தனர்.

# கொர்பி மீது அதிருப்தி

(மொஸ்கோ)

முன்னாள் சோவியத் தலைவர் மிகைல் கொர்பசேவ் நாட்டு மக்களின் அதிருப்தி உணர்வை வேண்டுமென்றே தூண்டிவிட்டு அவற்றுக்கு மேலும் தூபமிட்டு வருகிறார் என ரஷ்யா அதிபர் பொரிஸ் யெல்ஸின், கொர்பி மீது குற்றம் சாட்டி உள்ளார்.

அண்மைய மாதங்களில் மிகையில் கொர்பசேவ் ரஷ்ய அரசாங்கத்தையும் அதன் பொருளாதார சீர்திருத்தங்களையும் குறை சொல்லுவதிலும் மேலும் அதிகமாக வெளிப்படையாகவும் தாக்கி பேசுவதனையும் யெல்ஸின் சுட்டிக் காட்டியுள்ளார்.

## இலங்கை தமிழர் பிரச்சினைக்கு

# உலக நாடுகள் ஒத்துழைப்பு தரவேண்டும்

(லண்டன்)

உலக நாடுகள் இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு விடிவு காண ஒத்துழைக்க வேண்டும்' இப்பிரச்சினையை இலங்கையின் உள்நாட்டுப் பிரச்சினை. உள் நாட்டுக் கலகம் என ஒதுக்கி விடக்கூடாது என்று லோறன்ஸ் திலகர் பரிஸ்சிலிருந்து பி.பி.சிக்கு வழங்கிய பேட்டியில் கூறியிருக்கிறார்.

மேலும், வட பகுதியில் தெல்லிப்பழைச் சுற்றுப் புறத்தில் பொதுமக்களின் உயிரிழப்புக்கு சிறிலங்கா பாதுகாப்புப் படைகள் மேற்கொண்ட வான்தாக்குதலே காரணம் என்றும் தெரிவித்துள்ளார்.

# துண்டிக்கப்பட்ட கை மீள இணைப்பு

(சிட்னி)

தொழிற்சாலை விபத்தொன்றில் துண்டிக்கப்பட்ட இளைஞர் ஒருவரின் கையை அவுஸ்ரேலிய சத்திர சிகிச்சை நிபுணர்கள் மீண்டும் வைத்துப் பொருத்தியுள்ளனர்.

12 மணிநேரம் நடைபெற்ற சத்திர சிகிச்சையின் பின் அந்த இளைஞரின் உடல்நிலை நன்றாக இருப்பதாக டாக்டர்கள் கூறினர்.

சத்திரசிகிச்சை சிறப்பாக நடந்திருக்கிறது. ஆனால் அது முற்றுமுழுதாக வெற்றிகரமாக அமைந்திருக்கிறதா என்பதை உறுதிபடச் சொல்ல ஒருவாரகாலம் செல்லவேண்டும் என தெரிவிக்கப்படுகிறது.

சீமெந்துத் தொழிற்சாலை ஒன்றில் இந்த இளைஞரின் கை தோள்பட்டைக்கு சற்றுக் கீழாக துண்டிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

ஈழநாதம்

# சீன அணு ஆயுத சோதனை கவனத்தில் கொள்ள வேண்டும்

## இந்திய அணுசக்திவிசாரணைகுழு தலைவர்

(டில்லி)

அணுஆயுத பரவல் தடுப்பு கொள்கைக்கு இந்தியாவின் பதிலை தயார் செய்யுமுன்னர் அண்மையில் நடைபெற்ற சீன அணுஆயுத சோதனையை கவனத்தில் கொள்ளும்படி அணுசக்தி விசாரணைக் குழுவின் தலைவர் வி. கே ஐயங்கார் இந்திய அரசின் தலைமையிடம் கேட்டுள்ளார்.

செய்தியாளர்கள் மகாநாட்டில் உரையாற்றிய ஐயங்கார் "ஒரு நாடு என்ற வகையில் நாம் அணுஆயுத பரவல் தடுப்பிற்கு எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை என்றும் எனினும் சில நாடுகள் தங்கள் அணு ஆயுதத் திறனை எடுத்துக்காட்டி வருகின்றன" என்றும் தெரிவித்தார்.

ஈரானுக்கு அணு உலை ஒன்றை விற்பது குறித்து இன்னமும் முடிவு செய்யப்படவில்லை என்றும், அவர் தெரிவித்தார்.

## கர்நாடக எல்லையில் ஐந்து பொலிசார் கொலை

கர்நாடக எல்லையில் இனந்தெரியாத குழு ஒன்று பொலிஸ் நிலையத்தில் புகுந்து ஐந்து பொலிஸாரைக் கொலை செய்து ஆயுதங்களை அள்ளிச் சென்றது

இதனைத் தொடர்ந்து சந்தனக் கட்டைக் கடத்தல்காரர் வீரப்பனைத் தேடும் பணி தமிழ்நாட்டு எல்லையில் முடுக்கிவிடப்பட்டுள்ளது.

## வாகன வரிசை விபரம் 05-06-1992

சோதனைச் சாவடியில் இறுதியாகப் பதியப்பட்ட வாகன வரிசை இலக்கம்-4199

சோதனை நிலையத்தைத் தாண்டிச்சென்ற இறுதிவாகன வரிசை இலக்கம்-3300

இராணுவம் அனுமதிக்க வாகன வரிசை இலக்கம்-3281

இராணுவம் அனுமதித்து வடபகுதிக்கு வெளியேசென்ற வாகன இலக்கங்கள்:-

42-7312, 28-9254, 42-1996, 24- 612, 24-4854, 28-9186, 27-6524, 24-2545, 28-9037, 26-2421, 22-5742, 40-1714, 27-7263 40-1214, 27-3910, 27-849, 26-573, 24-3063, 26-6077, 27-159 42-3267, 26-5143, 27 9707, 37-1691, 25-9154, 36-2866, 25-3757, 25-1371, 36-1121, 25-5040, 72-8949

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:-

41 976, 28-2343, 26-423, 28-6623, 42-295 42-1750, 26-2510, 24-5258 42-0970, 26-2414, 26-2827, 24-9713, 27-8160, 42-1293, 26-0524, 37-1496, 36-4282, 25-1380, 25-6172.

★ தனியார் வாகன உரிமையாளர்களின் நன்மை கருதி வாகனவரிசை விபரம் எமது பத்திரிகையில் தொடர்ந்தும் வெளிவரும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.



TENDER FOR THE SUPPLY

## சூழல் கருத்தரங்கு

சூழல் மாசடைதல், சூழலைப் பாதுகாத்தல் குறித்து மக்கள் மத்தியில், சிறப்பாகப் பெண்கள் மத்தியில் விளக்கும் நோக்கமாக மகளிர் அபிவிருத்தி நிலையம் கருத்தரங்குகளைத் தொடர்ச்சியாகப் பல இடங்களிலும் நடாத்த முன்வந்துள்ளது.

சூழலும் அபிவிருத்தியும் தொடர்பாக முதலாவது கருத்தரங்கு நாவாந்துறையில் இடம்பெற்றது. இத் தொடரில் இரண்டாவது கருத்தரங்கு கட்டப்பிராயிலுள்ள சரஸ்வதி சனசமூக நிலையத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது இந்தக் கருத்தரங்கில் அப்பகுதி சார் பெண்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

## சுவரொட்டி ஒட்ட தடை

(சென்னை)

சென்னை நகரத்தில் சுவரொட்டிகள் ஒட்டுவது தடை செய்யப்பட்டுள்ளது.

பொலிஸ் அனுமதி பெறாமல் சென்னை நகரில் சுவரொட்டிகள் ஒட்டக் கூடாது என்று சென்னை பொலிஸ் கமிஷனர் அறிவித்துள்ளார்.

## காஞ்சிபுரம் சிறைச்சாலையிலிருந்து ஐந்து இலங்கைத் தமிழ் இளைஞர்கள் தப்பினர்

(சென்னை)

காஞ்சிபுரம் உப-சிறைச்சாலையிலிருந்து ஐந்து இலங்கைத் தமிழ் இளைஞர்கள் தப்பிவிட்டனர்.

காஞ்சிபுரம் உப-சிறைச்சாலை சிறப்பு அகதிகள் முகாமில் மூன்று பெண்கள் உட்பட 26 பேர் சிறை வைக்கப் பட்டிருந்தனர்.

தங்கள் பெயர்களைப் பொலிஸ் நிலையங்களில் பதிவு செய்யாததால் பொலிசார் இவர்களைக் கைது செய்து காவலில் வைத்தனர். முகாமிலிருந்த றெக்ஸ்றோய். கிருபா, யோகராஜ், குமார், ஜெயராஜ் ஆகியோர் தப்பியுள்ளனர். இவர்கள் 20க்கும் 30 வயதுக்கும் உட்பட்டவர்கள்.

காஞ்சிபுரத்திலிருந்து அகதிகள் தப்புவது இதுவே முதல் முறை. ஆனால் மதுராந்தம் சிறையிலிருந்து நான்கு முறை இலங்கைத் தமிழ் அகதிகள் தப்பிச் சென்றனர்.

அரச

பொதுமக்கள் உட்பட பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர். ஊர்வலத்தின் இடையிடையே பெரியளவிலான பதாகைகளும் எடுத்துச் செல்லப்பட்டன.

நீண்ட மனிதச்சங்கிலிபோல் காட்சியளித்த இவ் ஊர்வலம் குறிப்பிட்ட ஒரு புள்ளியைத் தாண்டிச் செல்வதற்கு ஒரு மணி நேரம் எடுத்தது.

ஊர்வலம் யாழ். செயலகத்தைச் சென்றடைத்ததும் மக்கள் வெள்ளம் செயலக மைதானத்தைநிரப்பிக்கொண்டது.

கடலெனத் திரண்டிருந்த மக்கள் மத்தியில் யாழ் அரசாங்க அதிபரிடம் மகஜர் கையளிக்கப்பட்டது மகஜரைப் பெற்றுக்கொண்ட அரச அதிபர் உரிய இடத்திற்கு மகஜரை அனுப்பி வைப்பதாக உறுதியளித்தார்.

வழிபாட்டு

## தனியார் மயமாக்கினால் சேவைக்காலப் பணத்தை குறைவாகப் பெறும் நிலை

தோட்ட நிர்வாகங்களை தனியார் கம்பனிகளுக்கு ஒப்படைக்கப்போகும் இந்த வேளையில் ஜனவசமையும் பெருந்தோட்டக் கூட்டுத்தாபன தொழிலாளர் தேசிய சங்கத்தின் பொதுச் செயலாளர் டி. வி. கந்தையா பெருந்தோட்டத்தொழிற்துறை அமைச்சர் ரூபா கருணா

# தமிழ் தேசிய எழுச்சிக்கு உரமூட்டிய தியாகி பொன். சிவகுமாரன்

-இளம்பரிதி

(யாழ்ப்பாணம்)

"சுயநல சிந்தனையும் துரோகத்தனங்களும் மலிந்திருந்த காலத்தில் தமிழ்த் தேசிய எழுச்சிக்கு உரமூட்டி தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு அடித்தளம் அமைப்பதில் தியாகி பொன் சிவகுமாரன் அளப்பெரிய பங்காற்றியவர்" இவ்வாறு நேற்று இரவு உரும்பராய் சைவத் தமிழ் வித்தியாலயத்தில் நிகழ்ந்த. தியாகி பொன் சிவகுமாரனின் 18வது ஆண்டு நிறைவையொட்டி நடைபெற்ற அஞ்சலிக் கூட்டத்தில் உரை நிகழ்த்திய யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு இளம்பரிதி கூறினார்.

நூற்றுக்கணக்கான மக்கள் திரண்டிருந்த இவ் அஞ்சலிக் கூட்டத்தில் அவர் தொடர்ந்து உரை நிகழ்த்தும்போது சுயநலமற்ற சிந்தனையுடன் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு இடப்பட்ட அடித்தளத்தினால் இன்று தமிழீழம் ஒரு புதிய வரலாற்றைப் படைத்துக்கொண்டிருக்கிறது. தமிழீழத்தின் நீண்டகால அடிமை வாழ்வுக்கும் துரோகத்தனங்களுக்கும் இன்று சாவுமணி அடிக்கப்பட்டிருக்கிறது உறுதியும், மானமும் வீரமும் நிறைந்த தாயக விடுதலைப் போராட்டம் நடக்கிறது இது தமிழீழத்தின் புதிய வரலாறு இந்த வரலாறு இன்று அகில உலகத்துக்கும் முன்னுதாரணமாக வழிகாட்டி நிற்கிறது என்றும் கூறினார்.

விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணியின் புனர்வாழ்வுப் பிரிவுப் பொறுப்பாளர் செல்வி மாலினி மாணவர் இயக்கத்தின் வலிகாமம் பிரிவுப் பொறுப்பாளர் செல்வன் சத்தியா, திரு செல்வநாயகம் ஆகியோரும் அஞ்சலி உரை நிகழ்த்தினர். விடுதலைப்புலிகளின் மூத்த உறுப்பினர் திரு. இளங்குமரன் உட்பட பல பிரமுகர்கள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

இறுதியில் பல கலை நிகழ்ச்சிகள் இடம் பெற்றன

மாலை 6.00 மணியளவில் தியாகி சிவகுமாரனின் சிலைக்கு மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது.

## வீரவேங்கை ஜீவராணிக்கு மக்கள் இறுதி அஞ்சலி

(பண்டத்தரிப்பு)

அலம்பில் பகுதியில் வீரச்சாவடைந்த வீரவேங்கை ஜீவராணியின் பூதவுடல் மக்கள் அஞ்சலிக்காக நேற்று முன்தினம் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி மண்டபத்தில் வைக்கப்பட்டது

கடந்த முதலாம் திகதி முல்லைத்தீவில் சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட நேரடிச்சமரில் விழுப்புண் பட்டு சிகிச்சை பெற்று வந்த வீரவேங்கை ஜீவராணி (ஜேம்ஸ் மல்லிகா - இளவாலை) 3ஆம் திகதி வீரச்சாவடைந்தார்.

மாலைநான்கு மணியளவில் வேங்கையின் பூதவுடலுக்கு ஆயிரக்கணக்கான மக்கள் அஞ்சலி செலுத்தினர்.

இதன் போது விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணியைச் சேர்ந்த தமிழ்ச்செல்வி விடுதலைப்புலிகளைச் சேர்ந்த நாவண்ணன் ஆகியோர் அஞ்சலியுரை நிகழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து விடுதலைப் புலிகள் மாணவர் இயக்க பண்டிசை முழங்க விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணி உறுப்பினர்கள் அணிவகுத்துச் செல்ல வேங்கையின்பூதவுடல் ஊர்வலமாக பண்டத்தரிப்பு சந்தைவரை எடுத்துச்செல்லப்பட்டது.

வீதிகளின் இருமருங்கிலும் தோரணங்கள் கட்டப்பட்டு மஞ்சள் சிவப்புநிற கொடிகள் பறக்கவிடப்பட்டதுடன் அனைத்து வர்த்தக நிலையங்களும் மூடி வேங்கைக்கு பூரண துக்கம் அனுஷ்டிக்கப்பட்டது

வீதிகளின் இருமருங்கிலும் நின்று பொதுமக்கள் பூதவுடலுக்கு மலரஞ்சலி செலுத்தினர் இறுதியாக வேங்கையின் பூதவுடல் ஊர்வலமாக கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கேவிதைக்கப்பட்டது

## காப்புறுதிக் கூட்டுத்தாபன அதிகாரிகள் அசமந்தம்

(யாழ்ப்பாணம்)

யாழ். ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள இலங்கைக் காப்புறுதிக்கூட்டுத் தாபனத்தின் கடமைகள் காலை 9.00 மணி தொடக்கம் மாலை 2.30 வரையுமே நடைபெறுகின்றது

ஏனைய சகல கூட்டுத்தாபனங்களும் 9.00 முதல் 4.30 வரை கடமையில் ஈடுபடுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது இதனைவிட இக் கூட்டுத்தாபன அதிகாரிகள் மக்களுக்கான காப்புறுதி சம்பந்தமான கொடுப்பனவுகளை உரிய காலங்களில் மக்களுக்குவழங்குவதில்லை எனவும் இங்கு கடமையாற்றும் அதிகாரிகள், ஊழியர்கள் மக்களுக்கு உரிய அறிவுறுத்தல்களை வழங்குவதில்லை எனவும் ஊழியர்களின் கடமை நூற்றுக்கு இருபத்தைந்து வீதமாக உள்ளது எனவும் இக் கூட்டுத்தாபன வட்டாரங்கள் மூலம்அறியவந்துள்ளது. (பர்)

## எரிப்பு

திருச்சி மத்திய பஸ் நிலையம் அருகே பாட்டாளிமக்கள் கட்சித்தலைவர் டாக்டர் ராமதாஸ் உருவப் பொம்மையை இந்திரா காங்கிரஸ் தொண்டர்கள் எரித்தனர்.

புலிகள் இயக்கத்துக்குத் தடைவிதித்திருப்பதைக் கண்டித்து சமீபத்தில் வெளியிட்ட கருத்துக்களை ஆட்சேபித்து இந்நடவடிக்கையாம்.

## வாசக நேயர்களே!

எமது ஈழநாதம் வெள்ளி மஞ்சரிக்கு வாசகர்களிடம் இருந்து தரமான சிறுகதை ஆக்கங்களை எதிர்பார்க்கின்றோம். பிரசுரிக்கப்படும் ஆக்கங்களுக்கு முந்நூறு ரூபாய் சன்மானம் வழங்கப்படும என்பதையும் அறியத்தருகின்றோம்.

27-6524, 24-2545, 28-9037, 27-8160, 42-1293, 26-0524, 26-2421, 22-5742, 40-1714, 37-1496, 36-4282, 25-1380, 27-7263 40-1214, 27-3910, 25-6172.

★ தனியார் வாகன உரிமையாளர்களின் நன்மை கருதி வாகனவரிசை விபரம் எமது பத்திரிகையில் தொடர்ந்தும் வெளிவரும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.


## TENDER FOR THE SUPPLY OF FURNITURE

Sealed Tenders are invited For the following

| | | |
|---|---|---|
| 1. | Arm Chairs | -166 nos |
| 2. | Office Table | - 11 nos |
| 3. | Glass Fronted Almirah | - 11 nos |
| 4. | Executive Table Type I | - 26 nos |
| 5. | Executive Table Type II | - 02 nos |
| 6. | Executive Cushioned Chairs | - 54 nos |
| 7. | Reading Table Type I | - 05 nos |
| 8. | Reading Table Type II | - 11 nos |
| 9. | Executive Steel Framed Chairs | - 10 nos |
| 10. | Slotted Iron Shelves 6 1/2' X 4 1/2' X 2' rack with Wheel | - 03 nos |
| 11. | Straight Back Chairs | -100 nos |
| 12. | Book Rack | - 05 nos |
| 13. | Wooden Cupboard 3' 6'' X 5'3'' | - 25 nos |
| 14. | Steel Cupboard (STD) | - 15 nos |
| 15. | Filing Cabinet [STD) | - 15 nos |
| 16. | Towel Rack | - 04 nos |
| 17. | Canteen Sq. Steel Formica Top Table | - 05 nos |
| 18. | Canteen Steel Chairs | - 26 nos |
| 19. | Wooden Locker (12 Compartments) | - 01 no |
| 20. | Side Rack | - 08 nos |
| 21. | Exam Folding Table | -100 nos |
| 22. | Notice Board 5' X 3' | - 01 no |

*Drawings and relevant details could be obtained from the Bursar, University of Jaffna between 8-6:92 to 11-6-92 during office hours on payment of Rs.200/- as non - refundabie deposit and Rs. 5000/- as refundable deposit.*

*Sealed tenders should be forwarded to the bu:sar, University of Jaffna on or before 10 00 a m on 23 06-1992 indicating ' Tenders for Furniture'' on the left hand corner of the envelope. The tender will be opened on the same day at 10.30 a. m.*

(சி/4513) Registrar



இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம்' பணிமனையில் 1992ஆம் ஆண்டு ஜூன் மாதம் 06 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது


செலுத்தப்பட்டன.

நீண்ட மனிதச்சங்கிலிபோல் காட்சியளித்த இவ் ஊர்வலம் குறிப்பிட்ட ஒரு புள்ளியைத் தாண்டிச் செல்வதற்கு ஒரு மணி நேரம் எடுத்தது.

ஊர்வலம் யாழ். செயலகத்தைச் சென்றடைந்ததும் மக்கள் வெள்ளம் செயலக மைதானத்தைநிரப்பிக்கொண்டது.

கடலெனத் திரண்டிருந்த மக்கள் மத்தியில் யாழ் அரசாங்க அதிபரிடம் மகஜர் கையளிக்கப்பட்டது மகஜரைப் பெற்றுக்கொண்ட அரச அதிபர் உரிய இடத்திற்கு மகஜரை அனுப்பி வைப்பதாக உறுதியளித்தார்.

## வழிபாட்டு

த் தன்மையற்ற ஒன்று.

போர்ப்பாதிப்புப் பிரதேசங்களிலுள்ள சமய வழிபாட்டிடங்களிலே பறக்க விடும்படி சர்வதேசநிறுவனங்கள்விதித்த வெள்ளை நீலக் கொடிகள் பறந்த ஆலயத்தின் மீது ஐந்து குண்டுகள் வீசப்பட்டன.

மக்களின் இதயங்களுக்குமிக நெருக்கமான சமய கேந்திரங்களை முற்றாகத் துடைத்து அழிப்பதென்பது வேறொரு வகையான தாக்கம் என்பது எமக்கு மிகத் தெளிவாகப் புலனாகிறது வற்றாபளை அம்மன் கோயில் தாக்குதல் நடைபெற்று பதினைந்து நாட்களுக்கிடையிலேயேஇந் நிகழ்ச்சி துர்க்கா தேவி ஆலயத் தாக்குதல் - இடம் பெற்றதிலிருந்து நாம் இம் முடிவிற்கு வருவது தவிர்க்க முடியாததாகின்றது.

தமிழ் மக்களின் வணக்கஸ்தலங்கள் மீது தாக்குதலை நடத்துவதன் மூலமும் பொருளாதாரத் தடைகளை விதிப்பதன் மூலமும் தேசிய விடுதலைப் போராட்டத்திலிருந்து தமிழ் மக்களைப் பின்னடையச் செய்து இராணுவ நடவடிக்கை மூலம் தேசியப் பிரச்சினைக்கு தீர்வுகாண முடியும் என சிறிலங்கா அரசு எண்ணுகிறது

துர்க்காதேவி ஆலயத்தின் மீது குண்டு வீச்சு நிகழ்ந்து கொண்டிருக்கையில், 115 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள வவுனியாவில் ஜனாதிபதி இப் பிரச்சினையைச் சமாதானமுறையில் மிக விரைவாகத் தீர்ப்பது பற்றிப் பேசிக்கொண்டிருந்தார்.

சமய வழிபாட்டிடம் ஒன்றுக்குச் சேதம் உண்டாக்குவது நாட்டின் ஒற்றுமைக்கு அழிவைத் தேடும் காரணியாகிவிடும் என்பதை நன்கு விளங்கிக் கொள்ளல் வேண்டும். மக்களின் அடிப்படையான நம்பிக்கைகளை அச்சுறுத்தும் எந்த முறைமையும் அரசியல் நம்பிக்கையில் இடம்பெறல் இயலாத ஒன்றாகும்.

...புள்ளனர். இவர்கள் 20க்கும் 30 வயதுக்கும் உட்பட்டவர்கள்.

காஞ்சிபுரத்திலிருந்து அகதிகள் தப்புவது இதுவே முதல் முறை. ஆனால் மதுராந்தம் சிறையிலிருந்து நான்கு முறை இலங்கைத் தமிழ் அகதிகள் தப்பிச் சென்றனர்.

புறுதிக்கூட்டுத் தாபனத்தின் கடமைகள் காலை 9 00 மணி தொடக்கம் மாலை 2 30 வரையுமே நடைபெறுகின்றது

ஏனைய சகல கூட்டுத்தாபனங்களும் 9 00 முதல் 4 30 வரை கடமையில் ஈடுபடுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது இதனைவிட இக் கூட்டுத்தா...

...களில் மக்களுக்குவழங்குவதில்லைஎனவும் இத்தகையவற்றும் அதிகாரிகள், ஊழியர்கள் மக்களுக்கு உரிய அறிவுறுத்தல்களை வழங்குவதில்லை எனவும் ஊழியர்களின் கடமை நூற்றுக்கு இருபத்தைந்து வீதமாக உள்ளது எனவும் இக் கூட்டுத்தாபன வட்டாரங்கள் மூலம்அறியவந்துள்ளது. (பர்)

திருச்சி மத்திய பஸ் நிலையம் அருகே பாட்டாளிமக்கள் கட்சித்தலைவர் டாக்டர் ராமதாஸ் உருவப் பொம்மையை இந்திரா காங்கிரஸ் தொண்டர்கள் எரித்தனர்.

புலிகள் இயக்கத்துக்குத் தடை விதித்திருப்பதைக் கண்டித்து சமீபத்தில் வெளியிட்ட கருத்துக்களை ஆட்சேபித்து இந்நடவடிக்கையாம்.

### தனியார் மயமாக்கினால்

# சேவைக்காலப் பணத்தை குறைவாகப் பெறும் நிலை

தோட்ட நிர்வாகங்களை தனியார் கம்பனிகளுக்கு ஒப்படைக்கப்போகும் இந்த வேளையில் ஜனவசமையும் பெருந்தோட்டக் கூட்டுத்தாபனமும், தொழிலாளர்களினதும், உத்தியோகத்தர்களினதும் கடந்த கால சேவையை கணக்கிடும்படி தோட்ட நிர்வாகிகளுக்கு உத்தரவிடப்பட்டிருப்பதாக தெரிகிறது.

அப்படி சேவை வருடங்களைக் கணக்கிட்டால்சேவைக் காலப் பணம் இன்றைய சம்பள அடிப்படையில் தான் அவர்கள் ஓய்வு பெறும்போது வழங்கப்படும். இதனால் தொழிலாளர்களும், உத்தியோகத்தர்களும் பாதிக்கப்படுவார்கள் அவர்கள் ஓய்வு பெறும்போதே கடந்தகால சேவையைக் கணக்கெடுத்து அன்றைய காலகட்டத்தில் வழங்கப்படும் சம்பள அடிப்படையிலேயே சேவைக்காலப் பணம் வழங்கவேண்டும் என்று தொழிலாளர் தேசிய சங்கத்தின் பொதுச் செயலாளர் டி. வி. கந்தையா பெருந்தோட்டத்தொழிற்துறை அமைச்சர் ரூபா கருணா திலகாவிற்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டார்.

### சுயவிருப்பத்துக்கு

உணவு நிவாரணம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கும்படி மாவட்ட செயலகங்களின் அதிகாரிகளால் வலியுறுத்தப்பட்டதாக தெரியவருகிறது.

### எரிபொருள்

விடுதலைப் புலிகளுடன் சம்பந்தப்பட்டிருந்தால் சட்டப் பிரிவுபதினொன்றின்கீழ் ஒன்று பிரிவின்படி ஏழு ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

### கொழும்பில்

மாதத்தில் பெய்யும் மொத்த மழை வீழ்ச்சியில் அரைவாசி அளவு ஒரேயொரு இரவில் பெய்த மழையில் ஏற்பட்டிருப்பதாக வானிலை அவதான நிலையம் தெரிவிக்கிறது.

கொழும்பிலும் அதைச்சுற்றியுள்ள பகுதியிலும் நேற்றுவரை 14 மணிநேரத்தில் 20 அங்குலத்துக்கும் அதிகமான மழை பெய்தது

நேற்றுப் போக்குவரத்து தடை ஏற்பட்டது அரச காரியாலயங்கள் இயங்கவில்லை.

### வாசக நேயர்களே!

எமது ஈழநாதம் வெள்ளி மஞ்சரிக்கு வாசகர்களிடம் இருந்து தரமான சிறுகதை ஆக்கங்களை எதிர்பார்க்கின்றோம். பிரசுரிக்கப்படும் ஆக்கங்களுக்கு முந்நூறு ரூபாய் சன்மானம் வழங்கப்படும என்பதையும் அறியத்தருகின்றோம்.

- ஆசிரியர்


## விற்பனைக்கு வந்துவிட்டது




இந்நூலின் பின்னிணைப்பாக

இ. தொ. கா. தலைவர்

**திரு. சௌ. தொண்டமானின் தீர்வுத்திட்டம் முழுமையாக**

தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு இணைக்கப்பட்டுள்ளது.